(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 106.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2021 நவம்பர் 11, வியாழக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

85/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மகாவலி வலயங்களில் நீண்ட காலமாக வசித்து வரும் மக்களின் காணிகளுக்கான உரித்துப் பத்திரங்களை வழங்கும் வழிமுறை யாது என்பதையும்;

(ii) மக்கள் நீண்ட காலமாக வசித்து வரும் வளவ வலயத்தின் ஒரு சில காணிகளுக்கு உரித்துப் பத்திரங்களை வழங்கும்போது, அத்தகைய காணிகளுக்காக விலை மதிப்பு செய்யப்பட்டுள்ள தொகை அநீதியானது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அவ்விடயம் தொடர்பாக இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

(iv) மகாவலி வலயங்களில் நீண்ட காலமாக வசித்து வரும் மக்களின் காணிகளுக்கு நியாயமான வரிப் பணத்தின் அடிப்படையில் உரித்துப் பத்திரம் வழங்க எடுக்கும் காலம் யாது என்பதையும்;

(v) இவ்விடயம் தொடர்பில் செயலாற்றும் நிறுவனங்களின் செயற்பாடு திருப்தியாக உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

282/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 - 2014 காலப்பகுதியில் இலங்கை இராணுவத்திற்கு சில கலைஞர்கள் விசேட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதி மற்றும் பதவிகள் தனித்தனியே யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தொண்டர் மற்றும் நிரந்தர படையணிகளுள் மேற்படி கலைஞர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள படையணி யாது;

(ii) அவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டிருப்பின், பயிற்சிக் காலம் மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட முகாமின் பெயர் என்பன யாவை;

(iii) பயிற்சியின் பின்னர் மேற்படி ஒவ்வொரு கலைஞருக்கும் பொறுப்பளிக்கப்பட்ட கடமை, இணைப்புச் செய்யப்பட்ட படைப் பிரிவு, செலுத்தப்பட்ட சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் தனித்தனியே யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி ஆட்சேர்ப்புகள் சட்டரீதியானவையா;

(ii) இன்றேல், அதனுடன் தொடர்புடைய தரப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள மற்றும் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை மேலும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

308/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடைந்துள்ள இலாபம்/நட்டம் வருட வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கடன் செலுத்த வேண்டியுள்ள அரச நிறுவனங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களின் எண்ணிக்கையும் அவற்றின் பெயர்களும் யாவை என்பதையும்;

(iii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஒவ்வொரு அரச வங்கிக்கும் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நிதி ரீதியாக வலுவூட்டுவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

465/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு ஆண்டிலும் அச்சிடப்பட்டுள்ள பாடப்புத்தகங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) அப்போதைய கல்வி அமைச்சரது வண்ணப் புகைப்படம் இப்பாடப்புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததா;

(iv) ஆமெனில், இப்புகைப்படத்தை மேற்படி பாடப்புத்தகங்களில் அச்சிட்டு வெளியிடுவதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

755/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் -

(i) வதியும் வீட்டு தேவையுடைய ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தனியார் காணிகளில் பகுதி அளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மாதிரிக் கிராமங்களாக அமைக்கப்படுகின்ற வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

832/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்கு முதன்முதலில் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப்பெற்ற வருடம் யாதென்பதையும்;

(ii) அந்த வருடத்திலிருந்து இதுவரை இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ள மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) 2014.12.31 ஆம் திகதி வரை இலங்கைக்குக் கிடைத்துள்ள மொத்த வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) 2015 தொடக்கம் 2020 வரையில் கிடைத்துள்ள நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிட்ட முதலீடுகளின் பெறுமதியானது ஒவ்வொரு கருத்திட்டத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

971/ 2020

கௌரவ எஸ்.எம்.எம். முஸ்ஸாரப்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போக்களினதும் உப டிப்போக்களினதும் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு டிப்போவினதும் உப டிப்போவினதும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் உப டிப்போவிலும் இன்றளவில் காணப்படுகின்ற பாவனைக்குப் பொருத்தமான நிலையிலுள்ள பேரூந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் உப டிப்போவிலும் இன்றளவில் காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பிராந்திய உப டிப்போ, 2001 ஆம் ஆண்டில் உப டிப்போவாக்கப்பட்டதோடு மேற்படி டிப்போ இதுவரை உப டிப்போவாகவே உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி உப டிப்போவை பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1365/2020

கௌரவ விஜித ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ''சமன் கெக்குல'', எம்பலவ, தெமட்டமலுவ, குருநாகல் எனும் முகவரியில் பேணிவரப்பட்ட இயோன் லங்கா இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பில்ம் ப்ரடக்ஷன் இன்டர்நெஷனல் கம்பனி பிரைவேட் லிமிடெட் எனப்படும் நிதி நிறுவனத்தின் நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியினால் தடை செய்யப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த நிறுவனத்தை தடை செய்ததற்கான காரணங்கள் யாவை;

(ii) அதன் பிரதானி மற்றும் பணியாட்டொகுதி அங்கத்தவர்களின் பெயர்கள் யாவை;

(iii) அந்த நிறுவனம் கிளைகளைக் கொண்டதாக இருப்பின், அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) அந்த நிறுவனம் மற்றும் அதன் ஒவ்வொரு கிளைக்குமுரிய சொத்துக்கள் தனித்தனியாக யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) பணம் மற்றும் வட்டி என்பவற்றை இழந்துள்ளதன் காரணமாக மேற்படி நிறுவனத்தின் வைப்பாளர்கள் மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) வைப்பாளர்களின் பெயர்கள் மற்றும் வைப்புத் தொகை என்பன தனித்தனியாக யாவை என்பதையும்;

(ii) வைப்பாளர்களின் பணத்தையும் வட்டியையும் மீள்செலுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அதற்காக எடுக்கப்படும் காலம் என்பன யாவை என்பதையும்;

(iii) இவ்விடயம் தொடர்பில் தவறாளிகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

9.

1829/2021

கௌரவ சாமர சம்பத் தசனாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நீதிமன்ற நடவடிக்கைகள் தாமதமடைவதன் அடிப்படையில் வழக்குகள் குவிவதன் காரணமாக பொது மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆலோசனைகளை எதிர்பார்த்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்ற வழக்குகள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்படுவது தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

2264/2021

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேராதனை, கன்னொருவ பிரதேசத்தில் மகாவலி கங்கையின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள சங்கிலிப் பாலத்திற்கு அருகில் பேராதனை தாவரவியற் பூங்காவிற்கு நேரெதிர் திசையை நோக்கியதாக மகாவலி கங்கையை ஆக்கிரமிக்கும் வகையில் சட்டவிரோதமாக ஹோட்டல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி சட்டவிரோத நிர்மாணிப்பைத் தடுப்பதற்கு இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கண்டி அனிவத்த பிரதேசத்தில் தொடங்வல புதிய பாலத்திற்கு இடது புறத்தில் அமைந்துள்ள (அனிவத்தையிலிருந்து ஹல்ஒலுவ வீதிக்கு பிரவேசிக்கும் இடத்தில்) மகாவலி கங்கையின் ஒதுக்குப் பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையான சட்டவிரோத நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சட்டவிரோத நிர்மாணிப்புகள் தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) சட்டவிரோத நிர்மாணிப்புகளைத் தடுப்பதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2021 நவம்பர் 12 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

தொழில் அமைச்சர்,— பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 20அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் 2021.10.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

காணி அமைச்சர்,— காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (460 ஆம் அத்தியாயமான) காணி எடுத்தற் சட்டத்தின் 63(2)(ஊ) ஆம் பிரிவின் கீழ் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 செப்தெம்பர் 08 ஆம் திகதிய 2244/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

ஒதுக்கீடு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

கைத்தொழில் அமைச்சர்,— தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 14(1)(ஊ) மற்றும் 15 ஆம் பிரிவுடன் உடன் வாசிக்க வேண்டிய, 53 ஆம் பிரிவின் கீழ் இரத்தினக்கல் மற்றும் ஆபரண உரிமக் கட்டணம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 மார்ச் 02 ஆம் திகதிய 2165/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டு, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 53 இன் கீழ் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2221/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு, மின்சாரவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் மற்றும் காடு மீள்வளர்ப்பு அத்துடன் காட்டு வள அபிவிருத்தி உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடித்தல் இராஜாங்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்ரல் 09 ஆம் திகதிய 2222/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

சுற்றுலாத்துறை அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2020 செப்தெம்பர் 08 ஆம் திகதிய 2192/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61(1)(தஅ) மற்றும் (தஆ) ஆம் பிரிவுகளின் கீழ் கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2019 யூன் 03 ஆம் திகதிய 2126/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61(1)(ப) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2021 மார்ச் 12 ஆம் திகதிய 2218/64 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

நீதி அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45(1அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2021 மே 03 ஆம் திகதிய 2226/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை (2013),— 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் 2018.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2013 ஆம் ஆண்டிற்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால்2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 14.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை (2014),— 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் 2018.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2014 ஆம் ஆண்டிற்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 15.

போக்குவரத்து அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவின் கீழ் 2019.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.02.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 16.

வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள் (2013 மற்றும் 2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 மற்றும் 2014.12.31 ஆம் திகதிகளில் முடிவடைந்த வருடங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 17.

வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2018.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 18.

வெகுசன ஊடக அமைச்சர்,— த அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் ஆண்டறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.06.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2016 ஆம் ஆண்டிற்கான த அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 19.

வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குக்கூற்று (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குக்கூற்று அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 20.

வெகுசன ஊடக அமைச்சர்,— செலசினே ரூபவாஹினி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2016 ஆம் ஆண்டுக்கான செலசினே ரூபவாஹினி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 21.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2021 யூலை 08) [1].

* 22.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 06 ஆம் திகதிய 2226/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் செயற்படுத்துதல்,—

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/21/0105/301/003 ஆம் இலக்க, 2021.02.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(அ) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (அதன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளையும், எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பையும் உள்ளடக்கிய) பிரேரணை அங்கீகாரமொன்றினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஆ) அந்த இறுதி அறிக்கையின் முதலாம் தொகுதியின் 08 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புக் குழு சம்பந்தமாக அந்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களையும், சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்;

(இ) குறித்த 08 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 1 ஆம் இலக்க சிபாரிசு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் அதற்காக விதித்துரைக்கப்படும் பிற பொருத்தமான வழிமுறையொன்றினை மேற்கொள்ளுதல்;

(ஈ) மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளில் மற்றும் அந்த இறுதி அறிக்கையின் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பில் 08 ஆம் இலக்க விடயத்திலும் 09 ஆம் இலக்க விடயத்தில் I முதல் LXI வரையிலுமுள்ள முறைப்பாடுகளுக்கு உரியதாக அந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்; மற்றும்

(உ) குறித்த இறுதி அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளுக்கு உரியதாக குறித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்

அதற்கேற்ப, மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு 2221/54 ஆம் இலக்க, 2021.04.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 08 ஆம் இலக்க விடயத்தின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு கருத்திற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளையும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பினையும் உள்ளடக்கிய) 08 ஆம் இலக்க விடயத்தைத் தவிர்த்து 09 மற்றும் 10 ஆம் இலக்க விடயங்களில் உள்ளடங்கியுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றுமாக.

24.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.